REGD No. M. 4642

திராவிடநாடு

இலங்கை 15 சதம் விலை அணா 2

மலர் 9 | 25-3-51 | இதழ் 40

★ கேலிக்குரிய காட்சி! ★

கேலிக்குரிய காட்சி! எனினும், பெருமிதத்தோடு பேசியுள்ளார், நமது நிதியமைச்சர்.

சென்னை மாகாணத்தில் போலீசாரின் தொகையும் அளவும், முன்னைவிட அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவர்களுக்கென, ஏராளமான தொகை செலவழிக்கப்படவேண்டியிருக்கிறது, என்பதாகச் சட்டசபையில் விளக்கியுள்ளார்.

போலீஸ் படையின் தொகையை அதிகரிக்கவேண்டியதற்கான காரணம், கம்யூனிஸ்டுகள் தொல்லையும், கலவர நிலைமையுமே என்ற 'பஜனை'யையும், அவர் பாட மறந்துவிடவில்லை.

நாட்டின் அமைதியையும் சமாதானத்தையும் பாதுகாக்க, சர்க்கார் அதிகமான பலம் உடையதாயிருக்க வேண்டியது அவசியம். ஆகவே, அதற்குப் போதுமான பணம் செலவழிக்கவேண்டியதும் அவசியம். ஆகவேதான், இவ்வளவு தொகை தேவைப்படுகிறது — என்பதாக, அவர் விளக்கியுள்ளார்.

சென்னை சர்க்காரின் நிர்வாகச் செலவைக் கண்டால், எல்லாவற்றையும்விட அதிகத்தொகை போலீசுக்காகவே செலவிடப்படுகிறது.

படைபலம் அதிகம். ஆகவே பணச்செலவும் அதிகம்.

இவ்வளவு அதிகமான போலீசும் அதற்காகச் செலவழியும் பணமும், நாட்டில் அமைதியும், கலவரமும் நிலவவே செலவழிக்கப்படுகிறது — இது, கோபாலரின் கூற்று.

ஆனால் அவர் கூறுவதுபோல, முன்னைவிட நாட்டிலுள்ள நிலை சீர்பட்டிருக்கிறதா என்ற கேள்விக்குத் தினசரிப் பத்திரிகைகளே பதில் தரும்.

திருட்டு! கொலை! ஏமாற்றுதல்! மோசடி!—இவை பற்றிய செய்திகள் விநோத விநோதமாக, தினசரி கிடைக்கின்றன.

சுயராஜ்யத்துக்கு முன்பு நாட்டில் ஏற்பட்ட, இதுபோன்ற தீச்செயல்களையும், இப்போதுள்ள கொடுமை நிகழ்ச்சிகளையும் ஒப்பிட்டால், இன்று குற்றங்கள் அதிகரிப்பது, விளங்கும்.

இந்த விளக்கத்தை, பலர், அடிக்கடி சொல்லியவண்ணமேயுள்ளனர். எதிர்க்கட்சிகளின் இடுப்பொடிப்பதையே தனது தந்திர சாகசத் திட்டமாகக்கொண்ட தேசியமடாம் "இந்து" இதழ்கூட [illegible] குறித்து அண்மையில் தீட்டியது.

மலபார் விசேஷப்படை, ஆயுதந்தாங்கிய போலீஸ்படை, என்று கூறப்படும் 'மூலபலப்படை' வெள்ளையன் காலத்தைவிட பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. அதேபோல, சாதாரண போலீஸ்படையின் அளவும் உயர்ந்திருக்கிறது.

இதனால், கம்பி வளைப்பவன், கன்னக்கோலிடுபவன், கழுத்தை அறுப்பவன், களத்து நெல்லைக் கொண்டு செல்பவன் தொகை குறைந்துவிடவில்லை.

மாறாக, மந்திரி வீட்டிலே திருட்டு, பகலிலே மோசடி, பாங்கியருகிலே களவு, நீதிபதி இல்லத்திலே ஏமாற்றுவேலை, என்பது போன்ற விசித்திர நிகழ்ச்சிகள் விரிந்துகொண்டே உள்ளன.

நாட்டிலே ஏற்பட்டுள்ள இத்தகைய சூழ்நிலையை உற்று நோக்கினால், அதன் விளைவுகள் தெரியும்.

அமைச்சர் கூறுவதுபோல போலீஸ் படை அதிகரித்திருக்கிறது.

அதேபோல, குற்றங்களும், பன்மடங்கு அதிகமாகியே உள்ளன.

பலகோடிகள், படைபலத்துக்கென அதிகமாகச் செலவழிக்கப்படுகிறது.

ஆனால், அதே அளவில், கொலையும் களவும் குறையவில்லை; மறையவில்லை.

வெட்கங்கெட்ட காட்சியல்லவோ, இது என்று கூறத்தோன்றும். ஆமாம், வெட்கங்கெட்ட காட்சி மட்டுமல்ல; விசித்திரமானது, வேதனையானது, விபரீதமானது!

போலீசும் அதிகம்!

குற்றமும் அதிகம்!!

இதைக் கேட்டால், வெளிநாட்டோர் எள்ளி நகையாடுவர். கையாலாகாதவர்களோ, என்று கைகொட்டிச் சிரிப்பர்.

போலீசும் அதிகமிருந்து, குற்றங்களும் அதிகரிக்கின்றன என்றால் அதற்கு இரு காரணங்கள் இருக்க வேண்டும்!

ஒன்று, போலீசாரிடம் திறமையில்லாது இருக்கவேண்டும்.

அல்லது, தங்களது பொறுப்புகளை, அவர்கள் நிறைவேற்றமுடியாதபடி ஏதேனும் இடையூறுகள் இருக்கவேண்டும்.

சென்னை மாநிலப் போலீஸ் படையைப் பற்றி யார் பேசினாலும், எப்போது பேசினாலும், பாராட்டுகின்றனரே தவிர, பழித்தோ, குறைத்தோ, கூறியதும்-கூறுவதும்—இல்லை.

நமது போலீஸ் திறமை மிக்கது—என்கிறார், முதல் மந்திரி.

சென்னை போலீஸார் அசகாய சூரர்கள்—இப்படி பாராட்டுகிறார், கவர்னர்.

நமது போலீஸ் வீரர்கள் ஆற்றியுள்ள செயல்கள் இவை யிவையென்பதாக பட்டியல் தருகிறார், போலீஸ் படையின் பிரதம நிர்வாகி.

எனவே, நமது போலீசின் திறமையைப் பற்றி குறை கூறுவதற்கில்லை

எனினும், குற்றங்கள், அதிகமாகிக் கொண்டே உள்ளன.

ஏன், இது? - என்று, யோசித்தால், கிடைக்கும் பதில், வேதனையூட்டக் கூடியதாக யிருக்கும்.

பொதிமாட்டின்மீது, ஏற்றவேண்டிய அளவு சுமைகளை வைத்தால், அது எப்போதும் போல சுமந்த வண்ணம் செல்லும். தடுக்கி விழவோ, வழியில் படுக்கவோ செய்யாது. அதை விடுத்து, சுமை தூக்கும் மாடுதானே என்று கருதி, சுமை மேல் சுமை வைத்தால், சண்டித்தனம் செய்யும், அல்லது தாங்காது படுத்துவிடும்.

இதே நிலைதான், இன்றைய போலீசாருடையது.

அளவுக்கு மிஞ்சிய பொறுப்புகளை அவர்கள்மீது சுமத்தப்பட்டுக் கொண்டே உள்ளன.

முன்பு போலீசாருக்கிருந்த பொறுப்புகள் வேறு, இப்போதுள்ள அளவும் முறையும் வேறு!

"கூட்டம் போட வேண்டுமா?—அனுமதி கேட்டே செய்யவேண்டும்."

"நாடகம் ஆடவேண்டுமா? —நகலை, முன்னதாகவே போலீசாரிடம் காட்டுக"

"மந்திரி வருகிறாரா—மறவாமல், அங்கே ஓடு—ஓடு!!"

"கண்ட்ரோல் பற்றிய புகாரா—கவனிப்பாய்!"

"மதுவிலக்கு குற்றமா—விடாதே, கவனித்துக் கொள்!"

இதுபோல, அதிகமான பொறுப்புகள் போலீசார் தலையில் வைக்கப்பட்டுள்ளன.

முன்பு இல்லாத பொறுப்புகள், இப்போது.

அது மட்டுமின்றி, முன்பிருந்தவைகளை விட, இப்போது தரப்பட்டுள்ள பொறுப்புகளிலேயே கவனமும் கவலையும் செலுத்தவேண்டும் என்ற அளவுக்கு, புதுக் கட்டளைகள் அடிக்கடி பிறப்பிக்கப்பட்டுக் கொண்டே உள்ளன.

மதுவிலக்கு, மந்திரிக்குப் பராக்குக் கூறுவது போன்ற வேலைகள், போலீசாருக்கு சகஜமானவைதான்; நிர்வாக இயந்திரத்தின் ஒரு பாகம் தான்.

ஆனால், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவது என்ற பெயரால் போலீசாருக்குச் சுமத்தப்பட்டிருக்கும் சுமை இருக்கிறதே; அது தரும் தொல்லைகளே அதிகம்.

சட்டமும் ஒழுங்கும், நிலைநாட்டப் படவேண்டியது, ஆட்சியாளரின்—கடமைதான்.

அதை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பும் போலீசாருடையது தான்.

ஆனால் இந்த 'சட்டமும் ஒழுங்கும்', வெள்ளையன் ஆட்சியை விட, சுயராஜ்ய சர்க்காரில படும்பாடு, சொல்லவும் நா கூசும்!

குற்றம் மல்காமல் பார்ப்பதும், ஆட்சியைக் கவிழ்க்காமல் பார்த்துக் கொள்வதும், மக்கள் மத்தியில் வேதனைகளும் விபரீதங்களும் நிலவாமல் பார்த்துக் கொள்வதுமே, முன்பு 'சட்டமும் அமைதியும்' என்று கருதப்பட்டது.

ஆனால், இன்று! 'சட்டமும் அமைதியும்' என்பதற்குத் தரப்படும் விளக்கம், எதிர்க் கட்சிகளின் இடுப்பொடிப்பது எப்படி, என்பதுதான்.

வெள்ளையன் வெளியேறிய பிறகு நாடு, ஒன்றும் அராஜக பூமியாகி விடவில்லை. அதிலும், சென்னை மாநிலம், வகுப்புக் கலவரத்தாலோ, வம்பர்கள் கொட்டத்தாலோ சீரழிந்து போய்விடவில்லை. எனினும், கூறுகின்றனர் 'அமைதியையும் சட்டத்தையும்' பாதுகாக்கவே அதிக போலீசாரை நியமனம் செய்ய வேண்டி ஏற்பட்டதாக.

இதற்குக் காரணமாக கம்யூனிஸ்டுகளைக் காட்டுகின்றனர்.

உண்மையில், இக்காரணம் ஏற்கக் கூடியதாகயிருந்தாலும் இருக்கலாம். ஆனால், இக்காரணம் எலியைப் புலியென்று கூறுவது போலாகும்!

ஏனெனில், கம்யூனிஸ்டுகள் தொகை மிகவும் சொற்பம். அவர்கள் தீயவழியில் நடந்தால், அதைக் கட்டுப்படுத்த முன்புள்ள வசதிகளே போதும்.

இருந்தும், அதே காரணத்தைக் காட்டி அதிகப்படியான சட்டங்கள், உத்திரவுகள், ஆகியவைகளை அதிகரித்துக் கொண்டே உள்ளது, காங்கிரஸ் சர்க்கார்.

சட்டங்கள்! — இன்றைய சர்க்காரில்; வெகு சாதாரணமாகிவிட்டன.

நினைத்த நேரத்தில் எல்லாம், புதுப் புதுச் சட்டங்கள், முளைக்கின்றன.

அதிலும் 'அமைதியும் சட்டமும்' பாதுகாக்கப்பட, கிளம்பிக்கொண்டிருக்கும் சட்டங்களின் தொகையோ ஒன்றல்ல, இரண்டல்ல!

'சட்டங்கள் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை"

என்று, சமீபத்தில் கல்கத்தாவில் நடைபெற்ற சட்ட நிபுணர்கள் மாநாட்டில் நீதி[illegible] பி. முகர்ஜி என்பவர் வெளியிட்டார்.

சட்டம் அதிகமாகிக்கொண்டேயிருந்தால் விளைவு விபரீதமாகும் என்று அவர் எடுத்துச் சொன்னார்.

"வாழ்க்கையின் ஒவ்வொரு முனையிலும் தொடுவதாக சட்டங்கள் இருக்குமேயானால், சட்டம் என்பதற்குள்ள மதிப்பு மறைந்துவிடும்"

"வெறும் வார்த்தைச் சிக்கல்கள் நிறைந்ததாயும், வாழ்பவனின் பாதையில் அடிக்கடி தென்படக்கூடிய

தாகவும் சட்டங்கள் இருந்தால், அராஜகம் மலரவே செய்யும்"

அவர் நீதிபதி! ஆகவே, இக்கருத்துக்களை, துணிவோடு, சட்ட நிபுணர்கள் மத்தியிலே, வெளியிட்டிருக்கிறார். இப்போதுள்ள சர்க்காரின் போக்கை மனதில் வைத்தே அவர் பேசியுள்ளார் போலும்.

ஒரு நாடு நல்லமுறையில் இருக்க வேண்டுமானால், அதற்குரிய சட்டங்களும் திட்டங்களும் அவசியம்.

வரப்பில்லாத வயல், வேலியில்லாத தோட்டம், இமையில்லாத கண், கடிவாளம் இல்லாத குதிரை—எவ்வளவு ஆபத்துக்குள்ளாகுமோ அது போலவே, சட்டம் இல்லாத நாட்டின் கதியும் ஆகும்.

ஆனால், சட்டம் தீட்டமுடியும், அதற்குள்ள வழியும் வசதியும் நம்மிடம் உண்டு என்ற கருத்தில் தங்கள் இஷ்டம்போலெல்லாம் சட்டங்களை 'உற்பத்தி' செய்வது, நீதிபதி கூறியதுபோல, மக்கள் மத்தியில் சட்டத்தைத் துச்சமாக மதிக்கும் துணிவையே கொண்டுவரும்.

இந்தச் சூழ்நிலை, [illegible] காங்கிரசாட்சியில் வெகு வேகமாக வளர்ந்து வந்திருக்கிறது.

காங்கிரஸ் ஆட்சியாளர் உற்பத்தி செய்துகொண்டிருக்கும் சட்டங்களின் தொகை மிக, மிக அதிகம்!

முன்பிருந்த சட்டத்திலே திருத்தி ஒரு மசோதா, அதைப் புதுப்பிப்பது என்ற பெயரில் மசோதா, அதை மாற்றுவது என்ற பெயரில் ஒரு மசோதா — இதுபோல உருவாகிய சட்ட சிருஷ்டிகள் பல பல!

சட்டம், காலத்துக்குத் தக்கபடி மாற்றப்படுவதும், மாறுவதும் சகஜம். தீய சட்டங்கள், அகற்றப்பட்டு சமுதாய நன்மைக்கான புதுத் திட்டங்கள் உண்டாக்கப்படுவதும் தேவையே.

ஆனால், காங்கிரஸ் சர்க்கார், சமுதாய நலனுக்கான சட்டங்களுக்கு பதில், 'அமைதியும் ஒழுங்கும் பாதுகாக்கப்படுவது' என்ற பெயரில் பற்பல உருவில் பல சட்டங்களைத் தயாரித்துள்ளது—இதுவரையில்.

நாட்டின் நலனுக்கான சட்டங்களைவிட 'பாதுகாப்பு' 'அமைதி' என்ற பெயரில் தயாரிக்கப்பட்டிருக்கும் சட்டங்களே அதிகம். இதன் காரணமாகவே, போலீசாருடைய பொறுப்புகள், அதிகமாகிவிட்டன.

தங்களுடைய பழைய வேலைகளுக்கு பதில், புது வேலையே முக்கியம் என்று கருதப்படவேண்டிய நிலை— ஏற்பட்டுவிட்டது, போலீசாருக்கு.

ஆகவேதான், குற்றங்கள் மலிந்துவிட்டன. சமுதாய நலனைப் பாதிக்கும் அளவில் தூர்ச்செயல்கள் அதிகரித்துவிட்டன.

"புலி வருகிறது, புலி வருகிறது!" என்று கூறுவதுபோல 'ஆபத்து நெருங்குகிறது, நெருங்குகிறது' என்று உரத்த குரலில பேசியவண்ணம், ஏதோ பெரிய ஆபத்து வந்துகொண்டிருப்பது போலும், அதை எதிர்க்கவேண்டிய வசதி தேவை என்பதுபோலும், மக்கள் மத்தியில கூறிக்கொண்டு, பலவித தற்காப்புச் சட்டங்களைத் தயாரித்துள்ளனர், காங்கிரஸ் ஆளவந்தார்.

இதற்குள்ள காரணம், எதிர்க்கட்சிகளை அடக்கி தங்களது எதேச்சாதிகாரத்தை நிலைநாட்டும் ஆசைதான்.

நாட்டில், பேராபத்து ஏற்படும் அறிகுறி கிடையாது.

அராஜகமும் அட்டூழியமும் அதிகரிக்கும் நிலை இல்லை.

எனினும், அமைதிக்கு ஒரு சட்டம்! பாதுகாப்புக்கொரு மசோதா!! போலீஸ் கையில் துப்பாக்கி—புதுப் பொறுப்பு!!!

'அமைதியும் சட்டமும் பாதுகாப்பது' என்ற பெயரால், எதிர்க்கட்சிகளின் பலம் வளராவண்ணம் தடுத்து நிறுத்தும் காரியத்தை வெகு வேகமாகச் செய்து வருகிறது, காங்கிரஸ் அரசாங்கம்.

தேய்ந்துவரும் தன் வாழ்வு, எதிர்க்கட்சிகள் வளர்ந்தால், அழிந்துபோகும் ஆபத்தை உண்டாக்கிவிடுமே என்ற அச்சமே எதிர்க்கட்சிகளை அடக்கும் ஆயுதங்களைத் தூக்கிப் போலீசார் கையில் தந்துவருவதன் காரணமாகும்.

ஆகவேதான், போலீசார் தொகையை அதிகமாக்கி வருகிறது காங்கிரஸ் ஆட்சி.

அதற்காக, அபரிமிதமான பணத் தொகையையும் செலவழித்து வருகின்றனர்.

எதிர்க் கட்சிகளின் இதயத்தில் ஈட்டிகளை வீசும் புது வேலையைச் செய்வதே போலீசாரின் கடமை— என்கிற எண்ணம் ஆள்வோரிடையில், இருப்பதால், அதைச் செய்வதிலேயே 'போலீசார் அதிக கவனமும் சிரத்தையும் கொள்ள வேண்டியவர்களாகி விட்டனர்.

விளைவு, சமுதாயக் கேடுகள் அதிகமாகின்றன.

திருட்டும் புரட்டும், கொலையும் கேடும், குற்றமும் தூர்ச் செய்கையும், தலைவிரித்தாடுகின்றன.

இவைகளை அடக்கி அழிக்க வேண்டிய போலீசின் கவனமோ, 144! ஊரடங்குத்திரவு! தடியடி! துப்பாக்கி! ஆகியவைகளின்மீது, பதிந்து கிடக்குமாறு செய்யப்பட்டுவிட்டது.

இதனால் சமுதாயத் தீங்குகள் வளர்ந்துகொண்டே உள்ளன. குற்றங்கள், அதிகமாகிக்கொண்டே உள்ளன.

கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற குற்றங்களின் பட்டியலை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த உண்மை, நமக்கு அச்சத்தையே தருகிறது.

ஆனால், நமது நிதி அமைச்சரோ பெருமையுடன் கூறுகிறார், அதிக போலீசார், நம்மிடம் இருக்கின்றனர், என்பதாக.

ஊர்ப் பயிரைக் காக்கவேண்டிய வேலியை எடுத்துச் சொந்தத் தோட்டத்தைச் சுற்றி வைத்துக் கொள்வது—சுயநலக்காரனின் செயலாகும். (9-ம் பக்கம் பார்க்க)

புரட்சிக் கவியைப் போற்றுவோம்
புத்துலகச் சிற்பியைக்
கொண்டாடுவோம்

திருச்சி தேவர் மன்றத்தில்
—சிந்தனைத் திருநாள்—
கவியரசர்
பாரதிதாசன் அவர்கள்

"மணிவிழா"

ஏப்ரல் 20 முதல் 29 வரை நடிகமணிகள், இசைச்செல்வர்கள் தரும் கலை விருந்துடன்!

அன்பர்கள் அனைவரும் வாரீர்

T. P. பொன்னுச்சாமி,
வரவேற்புக் கழகத் தலைவர்.

முகவரி:—
'யதார்த்தம்' தேவர் மன்றம்,
திருச்சி.

திராவிட நாடு

ஞாயிறு] 25—3—51 [காஞ்சி

ஊமை பேசுகிறான்- குருடன் பார்க்கிறான்- செவிடன்......?

★

வழக்கு மன்றம்—அங்கு ஏராளமான மக்கள் குழுமியிருக்கின்றனர்—அவர்களிடையே அமைதி-நிசப்தம்!

நீதிபதி அமர்ந்திருக்கிறார் — அவரோ திரு திருவென விழித்தபடியிருக்கிறார்.

குற்றவாளிக் கூண்டிலே, ஒருவன்—அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது.

சர்க்கார் தரப்பு வழக்கறிஞர் 'கூச்சல்' மட்டும் கேட்டபடியிருக்கிறது.

குற்றவாளிக்காக நியமிக்கப்பட்ட வக்கீலோ, சட்ட ஏடுகளை புரட்டுகிறார்—பிறகு பேந்த பேந்த விழிக்கிறார்—

ஏன் இந்த விசித்திர நிலை என்று கேட்கத் தோன்றும்—ஆனால் உண்மையைத் தெரிந்த பின்னரோ, வியப்பால் முகம் விரியும்—வேதனையால் இதயம் சுருங்கும்!

இந்த வழக்கு விசித்திரமானது-விபரீதமானதுங் கூட!

விளக்கினால், ஆத்திரம் ஏற்படும்-பிறகோ, 'ஐயோ பாவம்' என்று ஓயத்தான் முடியும்!

சுருங்கச் சொன்னால், குற்றவாளியென்று கூண்டிலே நிறுத்தப்பட்டுள்ளவன் — குற்றம் ஏதும் உண்மையில் செய்யாதவன்! ஒற்றைக்காலும், இரண்டு கரங்களும் இழந்தவன் — அவன் ஒரு நொண்டி! அவன் ஒரு நொண்டியானதற்குக் காரணம் பகையல்ல-விரோதமல்ல-நட்பு, அதுவும் நெருங்கிய உறவு கொண்டாடியதால் நேர்ந்த கோரம்! அவன் வழக்கு தொடுக்கவேண்டியிருக்க, அவன் குற்றவாளியாக கூண்டிலே நிறுத்தப்பட்டுள்ளான்.

நீதிபதியாக இருப்பவன் — யார் தெரியுமா? அவன்தான் குற்றவாளி. தன்னுடன் நண்பனாக இருந்தவனை இரவோடு இரவாக வெட்டி, இந்த வேதனையை உண்டாக்கியவன்.

குற்றவாளி, நீதிபதி—அத்தோடு மட்டுமல்ல—அவனோ செவிடு-செவி செம்மையாக இருந்தால் மட்டும் எப்படி நல்ல தீர்ப்பு தந்துவிட முடியும்-அவன்தானே குற்றம் இழைத்தவன். கொடுமை புரிந்தவன்!

சர்க்கார் தரப்பு வக்கீலோ, உளறுவாயன்—நாக்கு குளறுபவன்!

குற்றவாளிக்காக வாதாடும் வழக்கறிஞரோ, ஊமை — அவருக்குத் தந்திருக்கும் வேலையோ, வாயாடுவது!

இதைக் காணக்கூடிய மக்களோ, குருடர்கள்!

நீதிபதியோ செவிடு, குற்றவாளியோ நொண்டி, வக்கீல்களோ— ஊமை — உளறுவாயன் — பார்க்க வந்தவரோ குருடர்கள்!

விசித்திர வழக்கு என்று கூறி ஒருசிரிப்பை வீசிவிட்டு, எங்கே நடந்தது இது என்று கேட்பர்—ஆனால் வழக்கு நடக்கும் இடத்தைக் கூறினவுடன், சிரிப்பு மறையும், சிந்தனை விரியும், பெருமூச்சு பெருகும்.

X X X

இந்த வழக்கு உண்மையில் நடப்பதல்ல—உருவகம் செய்ததுதான்—என்றாலும் உண்மையின் அடிப்படையிலே!

இந்த விசித்திர வழக்கு—இன்றைய திராவிடத்தின் நிலையை விளக்கும் ஒரு வருணனைச் சித்திரம்—காட்சித் தெளிவு —அவ்வளவுதான்!

நாம் மட்டும், வடநாட்டுத்தொடர்பால் திராவிடம் தேய்கிறது, வளம் வீணாகிறது, உழைப்பு உறிஞ்சப்படுகிறது. வாழ்வு பறிபோகிறது, சிறப்பு சீரழிவாக மாறிவருகிறது—என்று விளக்கி வருகிறோம்.

நாம் கூறும்பொழுது, எதிர்க்கிறார்கள்—ஆனால் உள்ளுக்குள் கூறும் உண்மைகளின் ஆழத்தையுணர்ந்து பெருமூச்செறிகிறார்கள்.

நம் திராவிடம், இன்று 'டெல்லி'யால் நொண்டியாக்கப்பட்டு விட்டது. எதையும், பிறரைக்கொண்டு செய்யவேண்டி வந்துவிட்டது. தன் இச்சைப்படி உண்ணவும், உடுக்கவும் முடியவில்லை—அதற்குக் கூட பிறர் 'ஊட்ட'வேண்டிய நிலை—தன் உரிமைகளை காக்கவும் முடியாதபடி போய்விட்டது!

இதனை நாம் சொல்கிறோம்—ஆதாரங்கள் பலகாட்டி, அனுபவங்கள் பலவற்றைத் தொகுத்து!

அவர்கள், நம்மீது சீறுகிறார்கள். நாட்டை, நொண்டியாக்கி விட்டும், நடமாடும் நாசகார சடலங்கள் என்ற எதிர்காலம் தூற்றுமே என்ற பயம் சிறிதுமின்றி!

அதே நேரத்தில் நம் குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டிய இடம் 'டெல்லி'—யாரால் நொண்டியாக்கப்பட்டோமோ, அதே ஆசாமியிடம் நாம் நல்ல தீர்ப்பு பெறவேண்டுமானால் என் செய்வது?

குற்றவாளி, நீதிபதி—அவனிடம் கொடுமைக்காளானவன் நீதி பெற முடியுமா? அதுமட்டுமல்ல, நமது குறைகளை கேட்கிற அளவு, 'டெல்லி' தன் காதுகளை நம் பக்கம் திருப்புவதில்லை-கேளாக்காதராகவே 'டெல்லி' இருக்கிறது — குறைகளைக் கேட்டு தீர்ப்புவழங்க வேண்டிய 'நீதி தேவன்' செவிடு!

'செவிட்டு' நீதிபதிக்கு, 'உளறுவாய்' வக்கீலின் வாதங்கள்போல, 'டெல்லி' ஆட்சி அம்புகளின் நடவடிக்கைகள் உள்ளன.

நமது நாட்டைப்பற்றி எடுத்துச் சொல்லவேண்டிய வக்கீல்கள்தான், நம்மை ஆளும் காங்கிரஸ் மந்திரிகள்—இவர்களோ, 'நொண்டி' படும் அவதியை எடுத்துச் சொல்வதில்லை. மனமிருந்தாலும், பயம் இடையே வந்து தடுத்துவிடுகிறது — ஆம், அவர்கள் ஊமைகள்!

நாட்டு மக்களின் பிரதிநிதிகளோ, வேடிக்கை பார்க்கவந்த குருடர்களாகவே இருக்கிறார்கள்!

X X X

நாம் மட்டும், நம் நாட்டு நிலை இந்த விசித்திர வழக்குபோல இருந்தாலும், வாய்மூடிக் கிடக்கவில்லை.

இந்நாட்டின் 'நொண்டி' நிலையைக் காண்கிறோம்— ஏனெனில் நாம் குருடராக இல்லாததால்! அவர்தம் வேதனைக் குரல் வெளிப்படும்பொழுதெல்லாம், செவி வழியே, அத்துக்கத்தை ஏற்கிறோம் — நம் செவி, செம்மையாக இருப்பதால்! உரத்த குரலில், அந்த வேதனையை ஒலி

(10-ம் பக்கம் பார்க்க)

★★★ புகார் கண்டம் ★★★

[தில்லை - வில்லாளன்]

சித்திரக்கார சிங்காரத்திடம் எனக்குத் துளியும் கோபமில்லை.

அவன்தான் ஊருக்குஒரே சித்திரச் சாலை வைத்து நடத்திவந்தான். அதுவும் அவனுக்குத் தனியுரிமை. அந்த ஊருக்கு அவனே சித்திர வேலை முழுதும் செய்துகொடுக்க வேண்டும்-அப்படி ஒரு சித்திரக்காரரை அமர்த்துவது பழக்கம்—நெடுநாள் இருந்துவரும் முறை—அம்முறைப்படி அவன் அந்த உரிமையைப் பெற்றான்.

உரிமையைப் பெற்றான் என்பதைவிட பறித்துக்கொண்டான் என்பதே பொருத்தம் — ஏன்? காரணமில்லாமல் நான் எதையும், எப்பொழுதும், எங்கும் சொல்வதில்லை!

சித்திரம் வரையும் தனி உரிமை அவனுக்கு எப்படிக் கிடைத்தது என்பது தனிக்கதை — இருந்தாலும் ஊராரறிந்தது, அக்கம்பக்கத்தார், அவன் பெற்றது, சரி, முறை, அறம், நெறி என்று பாராட்டக்கூடியது!

என்னடா, இவன், புதிர் போடுகின்றானே, சித்திரந் தீட்டிடும் தனி உரிமை அவன் கைக்கு எப்படிப் போனது என்று கேட்டால், 'கதை' யளக்கிறானே என்று சீற்றம் வரலாம்-சீற்றத்தைமாற்றி, சிரிப்பை யழைத்துக்கொள்ளுங்கள் — சித்திரக்காரரின் 'பழங்கதை'யைக் கூறுகின்றேன்.

சித்திரச்சாலையமைக்க சிங்காரம் எப்படித் தகுதி பெற்றான் — ஒரு வேளை ஊரிலே உள்ள எல்லா சித்திரக்காரர்களையும் அழைத்துக்கேட்டு இவனுக்கு மற்ற எல்லோரும் அந்த உரிமையைத் தருவதில் தங்களுக்கு ஆட்சேபணையில்லையென்று கூறி விட்ட பின்னர் தந்ததா? — இல்லை, அத்தகைய சந்தர்ப்பமே ஏற்படவில்லை.

சிங்காரம் சித்திரச்சாலை அமைத்துக்கொண்டான்— சிரமமில்லாமல், அதே நேரத்தில் சிறிதும் யோசனையில்லாமல்! ஏன் அப்படிக் கூறுகிறேன் என்றால், அவன் சித்திரச்சாலை அமைத்தபொழுதே, யோசித்திருக்க வேண்டும், தனக்கு, அந்த ஊர் மக்கள் விரும்பும் சித்திரங்களை எழுதித்தர முடியுமா என்று! செய்யவில்லை. செய்திருந்தால், இவ்வளவு பெரிய தொல்லை வந்திருக்காது.

சிங்காரத்தின்மீது கோபமில்லை என்று சொன்னேன் — பிறகோ, அவன்மீது புகார்சொல்லஆரம்பித்து விட்டேன் என்று எண்ணுகிறீர்களா? நான் கூறுவது புகாரல்ல— நீங்கள் புரிந்துகொள்ள வேண்டிய புதிய உண்மை!

சிங்காரம், இந்தச் சாலையை அமைப்பதற்கு, மக்கள் எதிர்ப்பு இல்லாமலிருந்தற்குக் காரணம், இனிக் கூறினால் விளங்கும்!

சிங்காரம் ஒரு சாதாரண சித்திரக்காரனாகத் தோன்றவில்லை — கலை வளர்க்கும் பெரிய கலா வீரனாகவே இருந்தான்.

சித்திரக்கலை சீரழிந்து விட்டது — சித்திரவதை செய்யப்பட்டது. அதனை புத்துயிர்ப்பிக்கவேண்டும் என்று பேசிவந்தான்.

அவன் கலை, கலையென்று கதறினான்—ஊரார் அவன் பக்கம் கண்களை அகல விரித்துப் பார்த்தனர்—முதலில் மகிழ்ந்தனர் — பிறகு அவனை ஆதரித்தனர் — இறுதியில் அவன்பக்கமே சேர்ந்து கொண்டனர். ஏனெனில், ஊரார் கலையுணர்வு அதிகம் உள்ளவர்கலையுணர்வும், கலை வெறியும் கொண்டவர்கள். ஆகவே, கலையின் பேரால், மக்களின் மகத்தான ஆதரவை அவன் திரட்டினான்.

ஊரிலே,ஒரு அயலூரான் சித்திரச்சாலை வைத்துவிட்டான்—அவனது, சித்திரங்களைக் கண்டு மோகித்துக் கிடந்தனர் மக்கள்-அவர்களிடையே தான் சிங்காரம், பிற நாட்டுச் சித்திரக்கலையால், சொந்த நாட்டுச் சித்திர அறிவு சோர்ந்து விட்டது— மடிந்து விட்டதோ என்று கூட கூறும்படி நிலைமை வந்துவிட்டது, ஆகவே, அந்நியக் கலையை விரட்டுவோம், நாட்டுச் சித்திரக்கலையை வளர்ப்போம் என்று கூறினான்— ஊராரிடையே, இந்தப் பிரச்சாரம் வெகு வேகமாகப் பரவியது.

ஆனால், அயலூர் சித்திரக்காரனாலும், அவன் சித்திரங்களைக் குறைகூறத் தயாராயில்லை அயலூரான்—ஆனாலும் அழகு சித்திரங்கள் தீட்டித் தரத் தயங்கியதில்லை!

சிங்காரம் அவன் எழுதிய ஒவ்வொரு சித்திரத்தையும் எடுத்துக் கொண்டு குறை கூறினான்—புகார் பேசினான். ஊரார் நம்பினர். சுதந்திர உணர்ச்சி—சொந்தக் கலை பார்வம் பிறந்துவிட்டது.

கடைசியில், அயலூரான் அமைத்திருந்த சித்திரச்சாலை மூடப்பட்டது—எனினும் ஊருக்குச் சித்திரச் சாலையின்றி முடியுமா? அந்தச் சாலையை யார் அமைப்பது என்று ஊரார் கூடி முடிவு செய்யவில்லை. முடிவு செய்யவிடவில்லை-சிங்காரம், அதற்கு உரிய ஒரு முறையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று கூறி, அதுவரை நானே அமைக்கிறேன் என்று கூறி, சித்திரச்சாலையை அவன் அமைத்தான். ஆகவேதான், ஊரார் எதிர்க்கவில்லை.

அவனது உரத்த குரலுக்கு மக்கள் தலை வணங்கினர்-ஆனால்ஆண்டுகள் பலவாக அவன், அயலூரான் வைத்திருந்த சித்திரச்சாலையில் எழுதப்பட்ட சித்திரங்களைப் பற்றி சொன்ன குறைகள் மீண்டும் வரக்கூடாது என்பது ஊராரின் பேராவல்.

அந்த ஆவலைக் கிளப்பிவிட்டவன், சிங்காரம். அந்த வேகத்திற்கு தூண்டுகோலும் அவனே!—ஆகவேதான் சித்திரச்சாலை அவன் அமைத்ததும், அவன் தீட்டி அனுப்பிய சித்திரங்களைக் சற்றுக் கூர்ந்து பார்க்க ஆரம்பித்தனர்—குறைகள் தெரிந்தவுடன், உடனுக்குடன் கொஞ்சமும் தயங்காமல் எடுத்துக் கூறத் தொடங்கினர்.

சிங்காரத்தின்மீது எனக்குக் கோபமில்லை—அவனுக்கு எல்லோர் மீதும் கோபந்தான், ஆத்திரந்தான்! —ஏனெனில் அவன்மீது புகார் கூறுகிறார்களாம்! புகார் கண்டு அவன் பொங்கி யெழுந்தான்.

நானோ, புகார் கூறவில்லை, அவ

னது கடமைகளை நினைப்பூட்டினேன். அதுவும், அவனை ஊராருக்குப் பலமுறை எடுத்துச் சொன்னவைகளை, மறக்காமல் நினைவில் வைத்திருந்து அவைகளை எடுத்துரைத்தேன்!

அயலூரான் படங்கள் ஊரிலே, அமோக ஆதரவு பெற்றிருந்த பொழுது அவன் குறை கூறினான் எப்படி?

இதோ இந்தப் படத்தில் உபயோகப்பட்டிருக்கும் 'பச்சை' மோசமானது, 'சிகப்பு' சீர் கெட்டது, 'நீலம்', மகா மட்டம்! இந்த வர்ணச் சேர்க்கையே மிகவும் தவறானது— நம்முடைய நாட்டுச் சித்திரத்திற்கு ஏற்றது மஞ்சள், பச்சை, சிகப்பு, இப்படி மூவர்ணந்தான்!

இன்னொரு படத்தைக் காட்டி' இதில் அந்த உருவம் மிக மெலிந்து விட்டது, பெண் முகமாகத் தெரியவில்லை, பக்கத்திலிருக்கும் பாவையின் உருவத்தில் என்பான்.

மற்றொரு படத்தில், மானை, புலி கொல்லும் காட்சியைக் காட்டி, இது சித்திரமல்ல, இந்த நாட்டுக் கலையின் நிலை என்பான். அந்நியக் கலை புலி, அதனிடம் மாட்டித் தவிக்கும் மான், நம் சித்திர அறிவு என்பான்!

அந்நியன் தீட்டிடும் பள்ளிக்கூட படத்தைப் பழித்திருக்கிறான்.

அவன் வரைந்த கொலு மண்டபத் தர்பார் காட்சியைக் கேலி பேசியிருக்கிறான்.

அவன் எழுதிய மந்திரிக் கோலத்தைத் தவறுடையது என்று கூறியிருக்கிறான்.

அவனது, இயற்கை காட்சி விளக்கங்களையெல்லாம் குறை சொல்லியிருக்கிறான்.

அந்நியனின், கிராமீய வாழ்க்கைப் படங்களை அவலட்சணம் என்று கூசாமல் சொல்லியதுண்டு,

நகரத்து நடவடிக்கைகளை, படமாக்கிய பொழுது நரகவேதனையென்று, எழுத்து வர்த்தனத்தால், எரிச்சலைக் கொட்டியளந்ததுண்டு.

இவைகள் மட்டுமல்ல, இந்த அயலூரான் போய், சொந்த நாட்டுச்சித்திர சாலையமைக்கப்பட்டால், சித்திரங்கள் எப்படி எப்படியிருக்கும் என்று கூறியவைகளையும் நான் மறக்கவில்லை.

அவன் சொல்லியிருக்கிறான்- படங்கள் பல தீட்டி தீட்டியிருக்கிறான், ஊராரிடம்!

மாதிரிப்படங்கள்-பல, என் சிந்தனைப்பெட்டியிலே பூட்டி வைத்திருந்தேன்.

சித்திரச்சாலை, சிங்காரம் வைத்த பிறகு, அவன் ஊராருக்குக் கூறிய முறையில் படங்கள் தீட்டித்தருகிறானா என்று பார்த்தேன்-அவன் தருவதாகத் தெரியவில்லை!

அவனாவது, சித்திரங்கள் அழகாகத் தீட்டினான், வர்ணச் சேர்க்கைசரியில்லையென்றுகூறினான் சிங்காரம்.

சிங்காரந் தீட்டும் காட்சிகளோ, காணசகிக்க வில்லை.

சிங்காரத்தின் வாய்க்குத் திறமை அதிகம்-கைக்கு அவ்வளவு இல்லை!

கலையைப் பற்றி அவன் பேசியது, பலருக்குப் பிடித்தது—ஆனால் கலையின் பேரால் அவனே தீட்டிய சித்திரங்கள் பலருக்குத் தித்திப்பைத் தராதது மட்டுமல்ல, குமட்டலையே தந்தது!

கலையைக் காக்க அவன் கச்சை கட்டினான் — ஆனால் அவனே கலா நிலையத்திலிருந்து கலையபிவிருத்தி செய்ய முடியவில்லை — செய்யத் தெரியவில்லை!

திறமை யென்பது பரந்து விரிந்தது! ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வகையில் 'அது' இருக்கலாம் — இதனை ஒப்புக்கொள்வதில் வெட்கப்படவுங் கூடாது — வேதனைப் படவுந் தேவையில்லை.

சிங்காரம், கலைநிலை உயர்த்துவதில் உண்மையார்வம் உள்ளவன். அதற்காகப் பாடுபட்டான்—ஆனால் அவனே கலா நிலையப் பொறுப்பை நிர்வகிக்க முடியவில்லை — கூடாது என்பதல்ல என் கட்சி, தெரியாத நிலையில் அதனை ஏற்பது சரியல்ல என்பது என் கருத்து!

அயலூரான் படங்களைக் குறை கூறினான்—ஆரவாரித்தனர் மக்கள் சொந்தக்கலை உயர்ந்தால் ஏற்படும் மாறுதலை எடுத்துக் காட்டினான்— ஆனந்தத்தில் 'தத்திக்கோம்' ஆடினர்!

சிங்காரம் கூறியபடி, அயலூரான் போனான் — போனபின் ஏற்படுவதாகச் சொன்ன மாறுதல்தான் ஏற்படவில்லை! ஊரார் சிந்தனை தீவிரமாக வேலை செய்யத் தொடங்கிவிட்டது. ஆகவேதான் புகார் கிளம்பி விட்டது.

நான், சித்திரச்சாலையைப் பற்றி பரியாதவனல்ல—ஒரு காலத்தில் சித்திரச்சாலை வைத்து நடத்தியவன் தான். ஆனால் இப்பொழுது வெறும் ரசிகன்! அந்நியனை விரட்டிய சிங்காரத்தின் படங்களை, ரசிகன் என்ற முறையில், பார்த்தேன். என் கலையறிவு, அவைகளில் உள்ள குறைகளைக் கண்டுபிடித்து விட்டது, அவைகளைக் கூறாமலிருக்க முடியவில்லை — கூறினேன் — சிங்காரம் நான் காட்டிய குற்றங்களை, நான் பொறாமையால் எழுப்பிய புகார் என்றான்—நான், என் கடமை அது என்று கூறிவிட்டு, என் போக்கில் நடந்தேன்.

ஆரம்பத்திலேயே, நான்சிங்காரத்தின்மீது எனக்கு எள்ளளவும் கோபமில்லையென்று கூறினேன். கோபமில்லாததுமட்டுமல்ல, அவன் செய்த கலைத்தொண்டை இன்னமும் பாராட்டுகிறேன். அவன் கலை மறுமலர்ச்சிப் போராட்டத்தின பொழுது, அவனை கலை வெறியில் தடுமாறியபொழுது, தடுக்கிவிழுந்த பொழுது, அவன் போக்கைக் கண்டித்ததுண்டு — ஆனால் மொத்தத்தில் கலை மறுமலர்ச்சி கூடாது என்று கூறியதில்லை. இருந்தாலும், நான் புகார் கூறுகிறேன் என்று கூறினான்—அதையேதான் இப்பொழுதும் கூறுகிறான்.

அவன் எழுதிய படங்களிலுள்ள குறைகளை நான் ஏன் எடுத்துக் கூறுகிறேன். அவனை அடித்துவிரட்டி விட்டு நான் சித்திரச்சாலை அமைக்கவா? இல்லை. நான் கொஞ்சகாலம் ரசிகனாகவே இருக்க முடிவுசெய்து விட்டேன், சித்திரக்காரனாக இருக்க விரும்பவில்லை. ஆனால் எனக்குச் சித்திரம் எழுதத் தெரியும், சித்திரச்சாலையை சிறந்தமுறையில் நடத்தியவன் என்பது ஊரார் அறிந்தது —அந்த நேரத்தில் சிங்காரம், அந்நியனுக்கு அடங்கி, அவன்கீழ் சித்திரசாலை நடத்துகிறான் என்று புகார் கிளப்பியதுண்டு! அதனை அவனும் மறந்திருக்கமாட்டான் என்றே நினைக்கிறேன்.

குறைகளைக் காட்டுகிறேன். ஏன்? குறைகளை, சிங்காரம், தான் பெற்ற வெற்றி மகிழ்ச்சியிலே காணத்தவறியிருக்கக்கூடும். அவைகளை நான்

எடுத்துக் காட்டும்பொழுது அவன் புரிந்துகொண்டு, திருத்திக்கொள்ள உதவும் என்ற நல்லெண்ணத்தில்!

சிங்காரம், என் நல்லெண்ணத்தில் நம்பிக்கை வைக்காமல், கண்டபடி பேசினான். அவனுக்குப் புரியாத முறையிலெல்லாம் புகார் கூறினான்!

அவனை ஒழித்துவிட சதி செய்கிறேன் என்றான்.

வீண் குற்றம் பேசுவதிலேயே காலத்தைக் கழிக்கும் வீணன் என்று திட்டினான்.

இவன் மட்டும் சித்திரச்சாலை நடத்தினால், படங்களை இவன் கூறுவது போலத் தீட்டித்தர முடியுமா— என்று கேட்டான்.

வேண்டுமானால், மூன்று நாளைக்கு அந்த உரிமை தருகிறேன், செய்து பார்க்கட்டும் என்று வீம்பு பேசினான்.

என்னை அவன் புரிந்துகொள்ளாதது சாதாரணமான தவறு—அவனையே அவன் புரிந்துகொள்ளாதது வருந்தக் கூடிய பெருங் குற்றம்!

என்னை சதிகாரன்! என்று கூறினான். தொலையட்டும் அதே நேரத்தில் அவன் சித்திரச்சாலை யமைப்பு உரிமை அவனுக்கே சொந்தமானது என்றும், அவன் வீட்டுத் தோட்டத்துக் கீரைபோல நினைத்துக்கொண்டு பேசுவதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. — நான் பெரிதும் வருந்துகிறேன்.

அவனேதான் கூறினான், சித்திரச்சாலை அமைக்கும் உரிமையைப் பெறுவதற்கு ஒரு அரிய திட்டம் தீட்டும் வரை, அவன் சித்திரச்சாலை அமைப்பதாகக் கூறினான். இப்பொழுதோ, அது அவனுக்குரிய 'பிதுராஜித சொத்து' போல பேசுகிறான்.

அது மட்டுமா? நல்லெண்ணத்தோடு உலவும் என்னை எதிர்க்க அவன் கையாண்ட முறைதான் இன்னும் மோசமானது — அதை நினைக்கும்பொழுது இன்னும் வருத்தம் பெருகுகிறது!

புகார் கிளப்புவது எளிது—அது எல்லோருக்கும் தெரிந்த முறைதான்!

சிங்காரம், அயலூரான் சித்திரச்சாலையெடுத்து நடத்தும் பொழுது புகார் பேசியிருக்கிறான் — அதே நேரத்தில் என்னையும் ஏளனமாகப் பேசியதுண்டு.

இப்பொழுது, அவன் அந்த இடத்திற்குப் போனபிறகு எல்லாவற்றையும் மறந்து விட்டான், சொன்னவை எதுவுமே இப்பொழுது அவன் நினைவிற்கு வருவதில்லை. நான் எடுத்துக் கூறும்பொழுது மட்டும் சீறுகிறான்.

இப்பொழுது அவனது வேலையே என்மீது புகார் எழுப்பி, ஊரார் என்னை எதிர்க்க வேண்டுமென்பதுதான். ஊராரோ, என் வார்த்தைகளை நம்புவது மட்டுமல்ல, அது நியாயந்தானே, சிங்காரம் அயலூரான் இருந்தபொழுது உள்ள குறைகளை, இன்றும் வளர்க்கிறானே ஒழிய குறைக்கவில்லையே என்று பேசிடச் செய்தனர்.

அவன், அந்த பழைய 'லேபிலை' வைத்துக் கொண்டு ஆள்தேடினான். நானோ, உண்மையைச் சொல்வதே என் கடமையென்று பணிபுரிந்து வந்தேன். என்பக்கம், நானே கண்டு வியக்கும்படி ஊரார் குழுமினர்.

இதைக் கண்டு அவன் ஆத்திரப்படாமலிருந்தால்தான் ஆச்சர்யம் ஏற்படும் —அவன் கோபப்பட்டதில் துளியும் வியப்பில்லை!

நான் அவன் தீட்டிய படங்களிலே உள்ள குறைகளைக் கூறினேன். அவனோ என் 'அங்க லட்சண' ஆராய்ச்சியிலே இறங்கிவிட்டான்.

ஊரார் சிரித்தனர்— அட பைத்தியக்காரா, ஆளைப் பற்றி என்ன வந்தது, அவன் சொல்கிற குறைகள் உன் படத்தில் இல்லையென்று காட்டேன் என்று உரக்க உரக்க சிரித்தபடியே கேட்டனர்.

அவனோ, என் உயரம், எடை, அலங்காரம், ஆடை முறை இவைகளைக் குறை கூறுவதால், தன் தவறு மறைந்துவிடும் என்று தப்புக் கணக்கு போட்டான்—ஏமாந்தான்!

நேற்றுவரை, அவனைப் பாராட்டியவர்கள் இன்று குறைகூற ஆரம்பித்துவிட்டார்கள். அவனது சித்திரச்சாலையில் இருப்பவர்களே, அவனைக் கண்டிக்கவும் ஆரம்பித்துவிட்டனர்! அவன் நிலை இரங்கத்தக்கதுதான்—ஆனால் இரக்க வுணர்ச்சிக்காக, கலையைக் கொலை செய்ய அனுமதிக்க முடியுமா?

நான், ஏதேனும் படத்திலே தவறு காண்பித்தால், அவன் கையிலே வர்ணக் குழைவுகள் உள்ளன, வர்ணத் தட்டிருக்கிறது-வர்ணந்தீட்டும் கருவியுமிருக்கிறது உடன் திருத்திக் கொள்ளலாம். படமும் அழகாக இருக்கும் — நான் புகட்டிய பாடமும் பயனுள்ளதாக அமையும். ஆனால், அவன் அதைச் செய்வதில்லை. அவன் சொல்வதை நான் செய்வதா என்ற வீம்புப் பேச்சால் கலையை நிலை குலையச் செய்து வந்தான். சகிக்க முடியாத வேதனை, தாங்க முடியாத துன்பம், இது!

செய்பவன் யாராயிருந்தாலென்ன, சொல்லுபவை உண்மையானால் திருந்துவோம் என்று எண்ணினால்தான் கலைஞன், உண்மைக் கலைஞனாக மாற முடியும். சொல்கிறானே இவன் யார் தெரியுமா, இவன் இப்படிச் சொல்வதற்குக் காரணம் என்ன தெரியுமா... என்று வீண் ஆராய்ச்சியிலீடுபட்டால் வீராப்புவேண்டுமானால் நிலைக்கலாம், கலை வாழ முடியாது!

சிங்காரம் கற்றுக் கொண்டிருக்கிற பதில்கள் மிகவும் சாதாரணமானவை — அதுவும் ஒரு பெரிய சித்திரச் சீமான் பேசுபவையல்ல!

குறை சொல்கிறானே இவன் இதைச் செய்யமுடியுமா என்று கேட்பது பைத்தியக்காரத்தனமானது! நான் முன்னமே, கூறியது போல ரசிகனாக இருக்கிறேன். அதுவும் சாதாரண ரசிகன்மட்டுமல்ல, பத்துரூபாய் டிக்கட் வாங்கி, முன் வரிசையிலே உட்கார்ந்துகொண்டு, இசைவாணரின் இசையை ரசிக்கும் ரசிகனைப்போல! நான் ரசித்தபொழுது, என் மனதில் எழுந்த விமர்சனத்தை, கச்சேரியில் குழப்பம், அமைதியின்மை, பலாத்கார உணர்ச்சி எதுவும் ஒரு சிறிதும் ஏற்படாதவகையில்; என்னிடம் விரும்பி என்கருத்தைக் கேட்க விருப்பமுள்ள நண்பர்களிடம் என் விமர்சனத்தைச் சொல்கிறேன். இது கூடத் தவறா, என்ன!

நான், சித்திரச்சாலை அமைக்க, 'பந்து' தருகிறேன். ஆகவேதான் அவன் எழுதிய படங்களிலுள்ள குறைகளை எடுத்துக் காட்டுகிறேன். என்னிடம் பங்கு கேட்காமலிருந்தாலாவது பேசாமலிருக்கலாம் —விடவில்லையே!

ரசிகன், இசைவாணரின் தவறுகளைக் கூறினால், அவனையே பாடச்

சொல்வதைப்போல, சிங்காரம் பேசலாமா?

நாடகம் பார்ப்பவன், நாடக ராஜாபார்ட் தொண்டை கட்டிவிட்டது, அதனால், இசை சரியாக இல்லை என்று கூறினால், நீதான் அந்த வேடம் போடேன் என்று கூறுவது போல, அவன் பேசியதைக் கேட்க வருத்தமாகத்தானிருக்கிறது.

வீட்டிலே குழம்பிலே உப்பில்லையே என்று கோபித்துக் கொண்டானாம் கணவன், சட்டியும் பானையும் எடுத்துவந்து வைத்து, உப்பு, மிளகாய், புளி இருக்குமிடத்தையுங் காட்டி இனி நீங்களே சமையுங்கள் என்று கூறினாளாம் ஒரு கோபக்கார மனைவி—அந்தப் பேதையைப்போல பேசலாமா?

இப்படி நான் எண்ணும் பொழுது, அழுவதா, சிரிப்பதா என்று புரியவில்லை!

சங்கீதங் கேட்டவனை, சங்கீதம் பாடச் சொல்கிறான்! வேடிக்கை பார்ப்பவனை, வேடம் போடச் சொல்கிறான்! உண்ணச் சென்றவனை, அடுப்பங்கரை போகச் சொல்கிறான்! ஆனால் இதிலே ஒரு வித்தியாசம், நான் ரசிகன் மட்டுமல்ல, அந்தக் கலையறிந்தவன்தான்—ஆனால் இப்பொழுது, ரசிகனாகவே இருக்கப் போவதாகப் பகிரங்கமாக வெளியிட்டுவிட்டுத் தான், படத்தின் குறைகளைக் கூறுகிறேன்.

வேண்டுமென்று, 'இட்டு கட்டி' குறை கூறுவதானால், ஊரார் என் வார்த்தைகளை நம்புவார்களா? நான் மாய்மாலம் கற்றவனா, மக்களை பொய்களை நம்பும்படிச் செய்ய! உண்மைகளைக் கூறுவதால்தான் மக்கள் நம்புகின்றனர்.

எனக்குச் சித்திரச்சாலையமைக்க அனுமதி தருவதாகக் கூற இவன் யார், இவனுக்கு ஏது அந்த உரிமை என்று புரியாமல் உளறுகிறானே என்று நினைக்கும் பொழுது, அவன் நிலையைக்கண்டு பரிதாபப் படுகிறேன்.

அவன் என்னை எதிர்க்க கடைசியாகக் கையாளும் ஆயுதம்—அடுத்து நடக்கப்போகும் சித்திரக்காரர் போட்டியிலே நின்று பார்க்கட்டுமே, அதிலே வெற்றி பெற்றால், இவர்களை யார் தடுக்கப் போகிறார்கள் ஆனால், அவனுக்குள்ள பயத்தால் அந்த போட்டியை ஒவ்வொரு காரணங்காட்டித் தள்ளிக்கொண்டே போகிறான். அதனை ஊரார் அறிந்துள்ளனர் என்பது அவனுக்குத் தெரியவில்லை! என்று கூறுகிறான் சிங்காரம்.

கூறுவதற்கும், கேட்பதற்கும் இனிப்பாகக்கூட இருக்கலாம். ஆனால் யாரை, அழைக்கிறான் சிங்காரம்? இந்தப் போட்டியிலே கலந்து கொள்வதில்லையென்று பல நாட்களாக அறிவித்து விட்ட என்னை அழைக்கிறான். அதுவும், என் குற்றச்சாட்டுகளை மறைக்க ஒரு பட்டுத் திரையாக இந்த 'சவாலை' பயன்படுத்த பார்க்கிறான்.

பட்டுத்திரைதான் அது—ஆனால் ஏற்கனவே கிழிந்து கந்தலான திரை!

ஊரிலே பெரிய 'பைல்வான்' என்று திரிபவன் நடத்தும் 'குஸ்தி சண்டை'யைப் பற்றிப் பேசியவனை, 'நீயும் வாயேன்—வீண்பேச்சு ஏன்?' என்று கேட்பது போல இருக்கிறது. ஆனால் அழைக்கப்படுகிற நான் அதில் பங்கு கொள்ளவில்லையே தவிர, பழைய அனுபவம் உள்ளவன், இப்பொழுதும் அதற்குரிய பக்குவம் பெற்றவன் என்பதை மறந்துவிடக் கூடாது.

சிங்காரம் நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே, பல தடவைகள் இதுபற்றிக் கூறினேன். அவனோ, பல 'ஆயுதங்களை' என்மீது வீசி வீசி யலுத்துவிட்டான். கடைசியாகச் சித்திரக்காரர் போட்டிக்கு என்னை அழைக்கிறான்.

அவனுக்காக, அவனது தவறுகளை எடுத்துக்காட்டவே, ஒரு சித்திரக் காட்சியை ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறேன். அந்த சித்திரக் காட்சியை, ஒரு 'நகரும் ஏற்பாடாக்க' முயற்சி எடுத்து வருகிறேன்.

ஊர் ஊராக அதனைக்கொண்டு சென்று அந்தப் படங்களைக் காட்டி, என் நிலையை விளக்கிடப் போகிறேன். அதே நேரத்தில், கலை மறுமலர்ச்சிப் போரிட்டான் என்பதற்காக அவன் கலையையே அழிக்க எப்படி சகிப்பது? அதனை எதிர்க்கத் தான் போகிறேன்.

அந்தக் கண் காட்சியில் உள்ள படங்களை சிலவற்றைக் கூறுகிறேன்.

வானத்திலே சூரியன், கீழே ஒரு குக்கல் குரைத்தபடி இருக்கிறது—இது ஒரு காட்சி!

நள்ளிரவு — ஆந்தை அலறுவது போன்ற தோற்றம்—பக்கத்து வீட்டிலே உள்ளவன் நிம்மதியாகத் தூங்குகிறான்.

நாய் கடிக்கிறது-மீண்டும் கடிக்கவில்லை — மனிதன், விரட்டிவிட்டு மருந்து தேடுகிறான்.

பித்தன் உளறுகிறான் — மக்கள் தம் வழி நடக்கின்றனர்.

காட்டு வழி-நரி ஊளையிடுகிறது-மனிதன் தன் போக்கிலே நடக்கிறான்.

இம்மாதிரிப் பல படங்கள் தீட்டப்பட்டிருந்தன. இந்தப் படப் பகுதிக்கு புகார் கண்டம் என்ற பொதுப் பெயரிடப்பட்டிருந்ததைக் கண்டு ஆச்சர்யப்படுகின்றனர். என் நிலையை எடுத்துக் காட்டும் எண்ணச் சித்திரங்கள் அவை என்று நான் விளக்கினேன்.

சிங்காரம், இதனைக் கேள்விப்பட்ட உடனேயே என்னைக் கண்டபடித் திட்டினான் — கொஞ்சமும் பொருத்தமில்லாத புகார் எழுப்பினான்.

புகார் கண்டத்திலே நுழைபவர்களின் சிந்தனையை ஈர்க்கும் ஒரு பெரிய படமிருந்தது அங்கு.

ஒரு ஓட்டப் பந்தய மைதானம் —அதில் ஓட்டப் பந்தயத்தில் பலர் நின்றுகொண்டிருந்தனர். அதில் முதலில் சிங்காரம் நின்றுகொண்டிருந்தான் கையில் 'விசில்' ஏந்தி என் உருவம் இருந்தது.

இந்தப் படந்தான் அவன் மனதைப் பெரிதும் வாட்டிக் கொண்டிருந்தது—அந்தப் படம், அவன் சித்திரக்காரர் போட்டிக்கு அழைத்ததற்குப் பதிலாக அமைந்திருந்தது!

சிங்காரத்தோடு பலர் போட்டியிடக் காத்திருந்தனர். அதுமட்டுமல்ல, அவனது சித்திரச்சாலையிலே பலர் சிங்காரத்தை எதிர்க்கசந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தனர். சிலர் திடீர் சித்திரக்காரர்களாகக் காத்துக்கொண்டிருந்தனர். சிலர் உண்மைக் கலைஞர் என்று உரக்கக் கூவிப்போட்டியிடத் திட்டமிட்டிருந்தனர். இவர்களை முதலில் சிங்காரம் சமாளிக்க வேண்டும் அடுத்த 'ரவுண்டில்' பல சித்திரச்சாலைகளைச் சேர்ந்தவர்கள் போட்டியிடக் காத்திருந்தனர். அவர்களைத் தோற்

கடித்தபிறகு வேண்டுமானால், போட்டிப்பந்தயத்தை நடத்திடும் நிலையிலுள்ள என்னை அழைக்கட்டும் என்ற கருத்தை விளக்குவதாக இருந்தது அந்தப்படம் — அதனால்தான் என் மீது புகார்பேசி, திருப்தியடைந்து வந்தான்.

போட்டியிலே, இந்தபொல்லாங்கு பேசித்திரியும் புல்லன் நிற்கட்டும், நான் ஜெயிக்கிறேனோ, இல்லையோ, இவன் வரமாட்டான் என்று குரலை மாற்றிப்பேசினான்.

நான் சிரித்தேன் — அவன் சீறினான்.

சிங்காரம் எவ்வளவு வீரம் பேசினான்—என் ஒருவனுக்கே உரிமை உண்டு, இந்த ஊரார் என் ஒருவனையே ஆதரிப்பார்கள் என்றுபேசிய சிங்காரம் இன்று நான்தோற்றாலும் இவன் வெற்றி பெறமாட்டான் என்று பேசுவது, அவனது பெருவீழ்ச்சியைக் காட்டுகிறது என்பதை உணரட்டும்.

மருந்து சாப்பிடும் என்னை விருந்துக்கு அழைத்துவிட்டு, வீராப்பு பேசுகிறான் — ஆனால் புகார் கண்டகாட்சி ஊராரின் சிந்தனைக் கண்களைத் திறந்துவிட்டுவிடுமே — அப்பொழுது என்ன செய்வான். சிங்காரம்?

சித்திரக்காரர் போட்டியிலே நான் சேரப் போவதில்லை—தீர்மானமாக நான் சொல்லியாகிவிட்டது—இனியும் அதையே பேசுகிறான் என்றால், ஒன்று அவனுக்கு வேறு 'விஷயம்' கிடைக்கவில்லையென்று அர்த்தம், இல்லாவிட்டால் ஊரார் எதைக் கூறினாலும் கேட்டுக்கொள்வர் என்ற தப்புக் கணக்கு வைத்திருக்கிறான் என்று பொருள்!—ஆகவே, சிங்காரம், நான் எடுத்துக் கூறும் குறைகளை நீக்கி, தீட்டும் படங்களை திருத்தமுடன் அமைக்கட்டும். அதுதான் நான் விரும்பும் நல்ல முறை! அதை விடுத்து புகார் கிளப்பி, தனது, தொண்டின் புகழ் புகைந்து போய்விடும்படிச் செய்யக்கூடாது.

புகார் கண்டம்—சிங்காரத்திற்கு தெளிவு தரட்டும்! அதுவே என் ஆசை.

✕

3-ம் பக்கத் தொடர்ச்சி

ஊர்மக்களைத் தொல்லைகளிலிருந்து காப்பாற்றவேண்டிய போலீசாரை, தங்களுக்கான தற்காப்புப் பொருளாக ஆக்கிக்கொண்டு வருகிறார்கள்—சர்க்கார்பீடம் ஏறிய காங்கிரஸ்காரர்கள்.

தங்களது புகழும் பெருமையும் புரையோடிப்போய்விடக்கூடாது என்கிற ஆசையில், எதிர்க்கட்சிகளை அடக்குவதே, அரசியல் நிர்வாகம், என்று கருதுமளவுக்கு வெறிக்கொண்டு கிடக்கிறார்கள்.

வெறிப்போக்கை நாடு உணராமலில்லை—எனினும் விளக்கம் தருகிறார், அமைச்சர், போலீசு அதிசமானது ஏன் தெரியுமா, என்ற கேள்வி மூலம்.

போலீஸ் என்றால் சுயராஜ்யப் போரின்போது எவ்வளவு இழிவாகவும் கேவலமாகவும் பேசினர் என்பதை நாமும் நாடும் மறந்துவிடவில்லை!

இருந்தும் 7 கோடி ரூபாய்களை அதற்கென செலவழிக்கும், அமைச்சர், விளக்கம் தருகிறார், விளக்கம்!

'பசி! பசி!!' என்று, தடி தூக்கவும் தைரியமின்றி, கிடைக்கும் சம்பளம் போதாதென்று, மனதில் கிளர்ச்சியும், வயற்றில் பசியும் வாட்ட, உலவிடும் போலீசாருக்கு அதிகம் செலவழிக்கிறோம் என்கிறார்— ஆட்களை அதிகமாக்கிய வண்ணம்.

தர்பார் ஆட்சிக்காக, முன்னைவிடப் பன்மடங்கு போலீசாரைக் குவிப்பது கஷ்டமல்ல; ஆனால் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டுவிடவா முடியும், அவர்கள் எல்லாருமே வேதனைப் புலிகளாக உலவும் போது!

இதை அமைச்சர் அறிவது நல்லது—வீண் பெருமையோடு பேசி, தங்கள் விதண்டாவாத ஆட்சியைக் காப்பாற்ற முயலும் அமைச்சர் அறிவது நல்லது.

ஆட்சியின் அழகு, நாட்டில் ரசாபாசங்களும், கொள்ளையும் கொலையும் இல்லாமலிருப்பதுதான்.

இதைதான் 'அமைதி, சட்டம்' என்று சொல்வர்.

ஆனல், எது தீதோ அது வளருகிறது; எது வேண்டுமோ, அது தடுக்கப்படுகிறது.

'நாராஜகர்கள்' 'அமைதிக்குப் பங்கம் விளைவித்தவர்கள்' என்றுகூறி, நாட்டின் நல்வாழ்வுக்காகப்பாடுபடும் நலவிரும்பிகளை வீழ்த்தலாம், சிறைக்குள்; அதற்குத் துணையாக, போலீசவையும் அதிகரிக்கலாம்.

ஆனால், இந்தப்பாதை செல்வது, சாகும்முன்புதானேமரணப்படுக்கை தயாரித்துக்கொண்ட கதையாகத்தான்முடியும்.

'அடக்குமுறைக்கு இவ்வளவு ஆசாமிகளை வைத்திருக்கிறேன்' என்ற கூறாமல் கூறும், அவர்தம் திருக்கூட்டம், இதை அறிவது நல்லது. —✲—

உழவர் மாநாடு

திருச்சியில் 31-3-51ல்

'சர்தார் பட்டேல் பந்தலில்'

நடைபெறும்.

தலைவர்:
தோழர் N. நல்லசேனுபதி சக்கரை
(பழயகோட்டை பட்டக்காரர்)

திறப்பாளர்:
தோழர் O.P. ராமசாமி M.L.C.

வரவேற்புக் கழகத் தலைவர்:
தோழர் P.B.K ராஜாசிதம்பரம்
(திருச்சி ஜில்லாபோர்டு தலைவர்)

கிராமப்பஞ்சாயத்துகள் மாநாடு

1-4-51 ஞாயிறன்று நடைபெறும்

தலைவர்:
தோழர் V. நாடிமுத்து M.P.
(தஞ்சை ஜில்லா போர்டு தலைவர்)

திறப்பாளர்:
T. A. இராமலிங்கம் M.P.

வரவேற்புக் கழகத் தலைவர்:
டாக்டர் எட்வர்ட் பால் மதுரம்

தி. மு. க. பொதுச்செயலாளர்
சி. என். அண்ணாதுரை
அவர்களும் மாநாட்டில் முக்கிய பங்கெடுத்துக்கொள்கிறார்.

—வரவேற்புக் கமிட்டியார்.
கருணாநிதி பார்க், தெப்பக்குளம்,
திருச்சி.

இரண்டு மாநாட்டுக்கும் கட்டணம் ரூ. 2, ஒரு மாநாட்டுக்கு ரூ. 1

4-ம் பக்கத் தொடர்ச்சி

பரப்புகிறோம், நாம் ஊமையாக இல்லாததால்!

நாம் விடாது, நாட்டின் நொண்டி நிலை போக்க தொண்டு செய்வதற்குக் காரணம், நமக்குள்ள நம்பிக்கை வலுவடையும் முறையிலே தான் அடிக்கடி சம்பவங்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன.

ஆனால், அந் நம்பிக்கை சாதாரணமானதல்ல—மிக மிக கடினமானது தான் — அந்த சிரமம் நமக்குத் தெரியாததல்ல-தெரிந்தும் முயற்சி செய்கிறோம்.

நம் இலட்சிய ஈடேற்றத்திலே உள்ள கடினம், நாம் உணர்ந்தது மட்டுமல்ல — அடிக்கடி நாமே எடுத்துக் கூறி வருவதுதான்!

ஊமையைப் பேசவைக்க வேண்டும்-செவிடனை, கேட்கவைக்கவேண்டும். நொண்டியை ஊனமில்லாமலாக்கவேண்டும். குருடர்களை, ஒளிக்கும் விழியுடையோராக மாற்ற வேண்டும்—இந்த முயற்சி சுலபத்தில் முடியக் கூடியதா? இல்லை, எனினும் விடாது, திராவிட நாட்டுப் பிரிவினையை — நமது இலட்சியத்தை இசைத்தபடியுள்ளோம்!

ஊமை, பேசுவான், ஒருநாள் — அந்நாள் தள்ளிப் போனாலும், நடக்கப் போவது நிச்சயம் — ஊமையே பேசிவிட்டால், செவிட்டுத்தனம், தானே தவிடுபொடியாகிவிடும். செவிடன், காதுகளைத் தீட்டிக் கவனிப்பான், இப்பொழுதில்லாவிட்டாலும், இன்னுங் கொஞ்ச காலங் கழித்தாவது என்ற நம்பிக்கை நம் இதயத்தில் குடிகொண்டுள்ளது— அந்த நல்ல மன உறுதியுடன்தான் நாம் நம் பணியை தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

*   *   *

நமக்குத் தேவையான பணத்தை எடுத்து நமது மூலதனச் செலவுகளைச் செய்து கொள்ள முடியும். ஆனால், மேற்படி ரிசர்வ் நிதியிலிருந்து முழுத் தொகையையும் நாம் எடுப்பது சாத்தியமல்ல. ஏனெனில் இந்திய சர்க்காரின் பாதுகாப்பு பத்திரங்களாக, அவை, வைக்கப்பட்டிருக்கின்றன.

X   X   X

வெளியிலிருந்து வரும் உணவுப் பொருளில் ஐந்து இலட்சம் டன்களை நமக்குத் தருவதாக இந்திய சர்க்கார் ஒதுக்கியிருக்கிறது, இது 1951 ஆண்டுக்கென ஒதுக்கப்பட்டது. இதில் அரிசி ரூபத்தில் ஒரு லட்சம் டன் கூட இல்லை.

X   X   X

1948—49 முதல் இந்த கொள்முதல் செய்யப்படும் உணவுத் தானியங்களுக்கு, மணு ஒன்றுக்கு 8-அணா வீதம் இந்திய சர்க்கார் போனஸ் தந்தது. இதன் மூலம் கிடைத்த இரண்டு கோடியையும், நாம் உணவு உற்பத்திக்கென செலவழித்து வந்தோம். ஆனால் இப்பொழுதோ, இந்த போனஸ் தொகையை நாம் இழக்க வேண்டி ஏற்பட்டு விட்டது.

X   X   X

வெளியிலிருந்து அதிக விலைக்கு வரவழைக்கப்படுகிற உணவுப் பொருள்களை உள்நாட்டில் குறைந்த விலைக்கு விற்பதால் ஏற்படும் நஷ்டத்தை 3 : 1 என்ற அளவில் மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் ஏற்பது என்பது மாற்றப்பட்டுவிட்டது.

X   X   X

இந்திய சர்க்காருக்கு கஷ்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் மாகாண சர்க்காரை நடத்தும் ஒருவன் என்பதால் நான் வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன் — இந்திய சர்க்காரின் இத்தகைய கொள்கை மாற்றங்களால் நாம் பெரிதும் பாதிக்கப்படுகிறோம்.

இந்த ஆண்டு பட்ஜட்டை சமர்ப்பித்துவிட்டுப் பேசிய கனம் கோபாலர் கூறியவை-நாம் நொண்டியாக்கப் படுகிறோம் — நாமிழுக்கிறோம், கால் முறிகிறது, என்று கூறுவதுபோல, பறிபோகும் உரிமைகளைக் கூறி, கடைசியில் நாம் பாதிக்கப்படுகிறோம், பாதகம் விளைக்கப்பட்டு வேதனையை விருந்தாகப் பெறுகிறோம் என்கிறார் கோபாலர்.

கோபாலர், மாகாண அமைச்சர்-அவர் மத்திய சர்க்காரைப்பற்றி இப்படிக் கூறுகிறார்.

கோபாலர் பேச்சு — ஊமையின் வாய் திறப்பு!

கோபாலர் இப்பொழுது மட்டுமல்ல, இம்மாதிரி ஒவ்வொரு சமயத்திலும், தம் 'முணுமுணுப்பை'க் காட்டத்தான் செய்கிறார். இந்த முனகல், வளரும் என்பது நமக்குத் தெரியும்—அதனால்தான் நம் பணி இடையில் துவளாமல் நடத்தத் திடங் கொண்டுள்ளோம்.

கோபாலர், நொண்டியின் நிலையைக் கூறவேண்டிய வக்கீல போல, ஊமையாக இருப்பவர்-அவர் பேசிவிட்டார். ஊமையை பேசிடச் செய்துவிட்டோம்—இந்தப் பேச்சு இனி அடிக்கடி ஏற்படும். பிறகு, அதுவே போராட்டமாக மாறும்!

ஊமை வக்கீலைப் பேச வைத்த நமக்கு, செவிட்டு நீதிபதியை கேட்க வைக்க முடியாதா, என்ன! முடியும், முயன்றால்!

ஊமை நிலை ஒழிந்த பிறகு செவிட்டுத்தனம் ஓட்டமெடுக்கத் தான் செய்யும்!

பேசாமடந்தையைப் பேசவைத்தானும், விக்கிரமாதித்யன் — இது கதை-ஆனல், நாம், மத்திய சர்க்காருக்குக்கட்டுப்பட்ட மாகாண அமைச்சரையே, மத்திய ஆட்சியினால் பாதிக்கப்படுகிறோம் என்று கூறவைத்து விட்டோம். அந்த அளவிற்கு மகிழ்ச்சிதான் என்றாலும், ஊமையை, நிரந்தரப் பேச்சுடையவனாக ஆக்கும் வரை, நமக்கு ஓய்வில்லை. இரண்டொரு வார்த்தைகளை உதிர்த்து விட்டு, மீண்டும் ஊமையாகி விட்டால், நாம் விட்டுவிட முடியாது!

ஊமையை பேச வைத்து விட்டோம் — மந்திரமல்ல, மாயமல்ல, உண்மை நிலையை எடுத்து விளக்கியதால்! அதுபோலவே செவிடர்களைக் காதையும், கேட்கச் செய்ய முடியும் என்று நம்புகிறோம். நம் நம்பிக்கை நசித்து விடாது!

*   *   *

ஊமை பேசி விட்டது மட்டுமல்ல குருடன் விழி பெற்றான்!

இதுவரை வேடிக்கை பார்க்க கூடியிருந்த காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் வேதனைச் சித்திரங்களைப்

பாராமலிருந்தனர். பார்க்கத் தொடங்கிவிட்டனர்.

விழியிழந்தவர், விழி பெறுகின்றனர்—நமது உழைப்பிற்கு உற்சாகமூட்டும் செய்தி இது!

கோசல்ராம், திருநெல்வேலி வட்டத்து காங்கிரஸ் உறுப்பினர். அவர் 'விழி' பெற்றவர்போல பேசியுள்ளார்.

நல்ல பார்வை கிடைத்ததால்தான், நாட்டுநிலை நொண்டியானதையும், எடுத்துப் பேசி, தீர்ப்பு வாங்கித் தரவேண்டிய வழக்கறிஞர் ஊமையாக இருப்பதையும், தீர்ப்பு தரவேண்டிய நீதிபதி செவிடாக உள்ளதையும் ஒருங்கு நோக்குகிறார்-அவருக்கு நிலைமை நன்றாகப் புரிகிறது!

தனது, குருட்டு நிலை போய்விட்டது என்று எடுத்துக் காட்டுவது போலவே ஒரு 'அரிய திட்டம்' தந்து விட்டார்! — ஆச்சர்யப்படத் தேவையில்லை. அவர் நிலையில் அதைத்தான் சொல்லமுடியும்!

> மக்கள் உணவு, நூல் கேட்கிறார்கள், இரண்டிற்கும் மத்திய சர்க்காரை எதிர்பார்க்க வேண்டியுள்ளது. நீர்த் திட்டத்திற்காக ஒரு கோடிரூபாய் செலவழிக்கப்பட வேண்டுமானாலும் மத்தியசர்க்காரோடு கலந்தாலோசிக்க வேண்டியிருக்கிறது.
>
> மாகாண மந்திரிகளில் ஒருவர் டெல்லியிலேயே தமது பணிமனையை அமைத்துக் கொள்வது நல்லது.

இப்படிக் கூறுகிறார் கோசல்ராம் — கூறிய குறைவரை சரி, ஆனால அதற்குரிய திட்டமெனத் தருவதுதான் தவறு.

ஆம, அவர் தக்க திட்டம் தரமுடியும, இன்னுங் கொஞ்சநாள் போனால்! இப்பொழுது அவர் கண் மட்டுமேபெற்றார்-இன்னும் கருத்து பெறவில்லையே.

கருத்து பெற்றுவிட்டால், மந்திரியை டெல்லியிலே இருக்கச்சொலல மாட்டார், 'டெல்லி' அதிகாரம, சென்னைக்குத் தேவையில்லை என்று கூறுவார்.

அவர் திராவிடநாடு, திராவிடருக்கே என்று கூறக் காலம் பிடிக்கலாம்—ஆனால் அவர் கூறாமல போக மாட்டார.

இம்மாதிரி சம்பவங்களைப் பார்க்கும்பொழுதுதான்,நாம் நமது இலட்சியத்திற்காக எவ்வளவு அதிக உற்சாகங் காட்டிப் பணியாற்றவேண்டும் என்று தெரிந்துகொள்கிறோம் — திடமனதுடன் பணியாற்றுகிறோம்.

கோசல்ராம் கூறியதிலே மற்றொரு உண்மையிருக்கிறது!

மந்திரி நிலைமையோ, ஊமையினுடையது — 'டெலலி'யோ செவிடாக உள்ளது. ஆகவே, 'டெல்லி' பார்க்கட்டும், மந்திரி வாயில்லாவிட்டாலும், சைகையாலாவது நிலைமையை உணர்த்தட்டும். இதற்கு அதிக தூரத்தில இருத்தலாகாது. அருகருகே இருக்கவேண்டும். இருந்தால்தான் ஒருவர் காட்டும் சைகையை, மற்றவர்புரிந்துகொளள முடியும் என்ற எண்ணத்திலே கூறினாரோ என்னவோ, நாமறியோம்.

கோபாலர், மத்திய சர்க்காரின் போக்கால் பாதிக்கப்படுகிறோம் என்றார்—ஊமை, வாய் திறபபதைப் போல! பிறகு, பார்வையாளர், நிலைமையைச் சொன்னவுடன், அதையும் மறுக்காமல ஏற்றுக்கொள்வதைப்போலப பேசியுள்ளார்.

என்னை, டெல்லிக்கு அனுப்புவதானால் நான் போகத் தயார்.

இந்தத் தொல்லையைத் தீர்க்க, முன்வருதாகக் கூறிவிட்டார்—ஆனால் தெரிந்தெடுத்திருக்கும் மார்க்கந் தவறு—டெலலிக்குப் போகவேண்டும் என்பது என்னவோ மறுக்கமுடியாத உண்மை. ஆனால், மண்டியிட்டு, கெஞ்சி கேட்டு உதவிகள் பெறும் ஒரு மாகாண மந்திரியாக அலல—திராவிடநாட்டுப பிரிவினையை எடுதது விளக்கும் மக்களின் பிரதிநிதியாக! அந்நாள் எந்நாள் என்றுதான் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர்.

கோபாலர், டெல்லி போவதாகக் கூறிவிட்டார், கோசல்ராம், அவரே ஏற்றவரென்றும், மாகாணப் பிரதமர் அவரை அனுப்பவேணடும் என்றும் கூறிவிட்டார்.

டெலலிக்கு அனுப்புவது, ஒருவரை, அதுவும் மாகாண நிலைகளை அப்பப்பொழுது விளக்க — என்ற அளவிற்கு வந்துவிட்டார்கள்!

ஆம், அவர்கள், நம் பாதையை நோக்கி விரைந்து வருகின்றனர். நாம் வரவேற்கிறோம் அவர்களை மனமார! ஆனால் அவர்கள் வரும் வரை நாம் ஓய்ந்திருக்கப் போவதில்லை, நமது இலட்சியப் பாதையில் நடந்தபடிதானிருக்கப் போகிறோம்.

நாம், மாயதந்திரங்கள் கற்றவராக இலலாவிட்டாலும், மக்களின் மனநிலை புணர்ந்தவர்கள் — அவர்தம் சுக, துக்கங்களை பகிர்ந்தவர்கள்—ஆகவேதான் நம் தாயகத்தின் வேதனை தீர, நம், நாடு, வடநாட்டிலிருந்து பிரிந்து வாழவேண்டும் என்கிறோம் திராவிடநாடு திராவிடருக்கே என்று முழக்குகிறோம்.

நம் நாட்டு வழக்கை மக்கள் மன்றத்திற்குக் கொண்டுவந்தோம்.

நாடு, நொண்டியானதைக் காட்டினோம். அப்படி யாக்கியவரைக் கண்டித்தோம்.

நம் பேச்சால், எழுத்தால், காட்டிய விளக்கங்களால் ஊமையை பேச வைத்தோம்—குருடரை, பார்க்கச் செய்தோம்.

இனி எதிர்காலத்தில், 'டெல்லி' தனது கோளாக்காதை நம் பக்கம் திருப்பவேண்டும் — திருப்பி, நம் கோரிக்கையை செவி மடுத்து செயலாற்ற வேண்டும்.

செவிட்டுநிலை போய்விட்டாலும்-நம் தொல்லை தீராது. ஏனெனில் குற்றவாளியே நீதிபதியாக இருப்பதுபோல, 'டெல்லி' நாட்டுப் பிரிவினையைப்பற்றி முடிவுதரும் இடத்திலே இருக்கிறது. எனினும் நம் முயற்சி வெற்றிபெறும் என்ற நம்பிக்கை உண்டு.

நொண்டியைக்கண்டு ஊமைபேசிவிட்டான்—ஊமையின் குரல்கேட்டு குருடன், விழிபெற்றான். இனி செவிடு,கேட்கவாமுடியாது! நிச்சயம் செவிடுபோய், நம் செய்தி கேட்கும்!

சேலம் மாவட்ட தி.மு.க. கமிட்டி கூட்டம்

நாளது 29—3—51-ல் வியாழக்கிழமை மாலை 2 மணிக்கு செவ்வாய்ப்பேட்டை தி. மு. கழகக் கட்டிடத்தில் சேலம் மாவட்ட தி. மு. கழகக் கமிட்டி கூட்டம் நடைபெறும். மாவட்ட மாநாடு நடத்துவதுபற்றி முடிவு செய்யவேண்டியிருப்பதால் அங்கத்தினர்கள் தவறாமல் வந்து சேரவேண்டுமாய்க் கோருகிறேன்.

ஜி. பி. சோமசுந்தரம்
செயலாளர்.



Edited Printed & Published by C N. Annadurai M. A at DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram